புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

=====================================================================

# சங்க இலக்கியத்தில் அஃறிணை அறிவுறுத்தும் அகவாழ்க்கை

முனைவர் ஜெ.ஜெயசித்ரா
உதவிப்போராசிரியர், தமிழ்த்துறை
தூயநெஞ்சக்கல்லூரி, திருப்பத்தூர்

=====================================================================

## முன்னுரை

வாழ்க்கை நம் வசப்பட்டுவிடவும் அர்த்தமுடையதாகவும் மகிழ்ச்சியுடையதாகவும் அமைவதற்கு நம் எண்ணங்களே முதன்மை ஆதரமாகும்.நம் எண்ணங்களை மாற்றினால் நமது கையில் இல்லா எதிர்காலத்தையும் மாற்ற முடியும் என்பது சிந்தனையாளர் எம்.எஸ்.உதயமூர்த்தியின் கருத்து.வாழ்க்கை களிப்புடன் நோக்கி வாழ்வற்கே அல்லாமல் வெறுப்புடன் நோக்கி வீழ்வதற்கு அல்ல எனபதற்கிணங்க புவியில் உயிர்கள் தோன்றிய காலந்தொட்டே தோன்றியது காதல் உணர்வு.உலக வரலாற்றை பல வண்ணமாக்கியது உணர்வுகளின் பிறப்பாகிய காதலே . காதலைத் தீண்டாமல் வாழ்க்கையைக் கடந்தவர்கள் மிகச் சிலரே. அத்தகைய வாழ்க்கையை நாம் அகம் என்றும்,புறம் என்றும் இரு கூறாக வகைப்படுத்துகிறோம் . 1.அகம் - உணர்ந்து மகிழ்வது, 2.புறம் - பகிர்ந்து மகிழ்வது
சாகா வரம் பெற்ற சங்க இலக்கியத்தில் கூட அக இலக்கியங்களின் எண்ணிக்கையே மிகுதி.உயிரினங்களின் வாழக்கை முறை இயற்கை அமைப்பை மையம் கொண்டே வடிவமைக்கப்பட்டுள்ளது . அதாவது உயிரினங்களுக்கிடையிலான உணவு,உடை,பழக்க வழக்கம், பண்பாடு, கலாச்சாரம், தொழில், பொழுதுபோக்கு, எண்ணங்கள் ,நம்பிக்கைகள் என அனைத்துமே இயற்கைச்சூழலினை அடிப்படையாகக் கொண்டு கட்டமைக்கப்பட்டுள்ளது என்பதற்கு தமிழ் இலக்கியத்தில் ஏராளமான சான்றுகள் உள்ளன .

## திணை – விளக்கம்

திணை என்றால் வகுப்பு அல்லது பிரிவு என்று பொருள்படும்.அவை இரண்டு வகைப்படும்,1.உயர்திணை 2.அஃறிணை என்று தமிழ் இலக்கணம் வகைப்படுத்துகிறது.இவ்விடத்தில் தமிழர்களாகிய ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டியவையாக இதனை கருத்தில் கொள்ள வேண்டும் அதாவது யாருடைய மனதையும் , எவற்றையும் புண்படுத்திட கற்றறியாதவன் நம் தமிழன்.அதேப் போன்று எந்தவொரு பொருளுக்கும் காரண காரியத்தோடு பெயரிட்டு அழகு பார்த்தவன் நம் தமிழனைத் தவிர வேறெவரும் இருக்க முடியாது என்பது ஆனித்தரமான உண்மையாகும். காரணம், உயிரினங்களில் உயர்வானவற்றை உயர்திணை என்று குறிப்படுகின்ற போது உயர்வு அல்லாதவற்றை அதற்கு எதிர்மறையாக 'தாழ்திணை' என்றுதானே தமிழில் குறிப்பிட்டிருக்க வேண்டும்.ஆனால் நம் தமிழன் அவ்வாறு குறிப்பிடாமல் உயர்வு அல்லாத திணை அல்திணை அஃறிணை என்றே குறிப்பிட்டுள்ளான்.இவ்விடம் தமிழனின் தமிழ்ப்புலமையை நாம் நன்கு உணரலாம்.

## உயர்திணை

தமிழ் இலக்கணத்தில் உயர்திணை என்பது தேவர்,மக்கள்,நரகர் என்பவர்களை வகைப்படுத்தும் சொல்லாகும்.இவர்களுக்கு உள்ளதாகக் கருதப்படும் பகுத்தறிவினைக் கொண்டு இப்பெயர் வழங்கப்பட்டிருக்கலாம்.

## அஃறிணை

*தமிழ் இலக்கணத்தில் அஃறிணை என்பது பகுத்தறிய முடியாத உயிரினங்கள்,உயிரற்ற பொருட்களை வகைப்படுத்தும் சொல்லாகும்.இதனை அல்+திணை என்று பிரிக்கலாம்.எனவே பகுத்தறிவுடையது உயர்திணை என்றும்,பகுத்தறிவற்றதை அஃறிணை என்றும் நாம் கருத்தில் கொள்ளலாம்.*

*மக்கள் நரகர் உயர்திணை*
*மற்று உயிர் உள்ளவும் அல்லவும் அஃறிணை 1 (நன் .261)*

*என்கிறது நன்னூலாகிய இலக்கண நூல்.*

*உயர்திணையாக இருந்தாலும்,அஃறிணையாக இருந்தாலும் அதனது வாழ்க்கை அமைப்பானது அன்பின் அடிப்படையானது என்பதே உண்மையாகும். அந்த வகையில் தமிழ் இலக்கியத்தில் அஃறிணை உயிரினங்களின் செயல்பாடுகள் உயர்திணைக்கு எங்ஙணம் பொருந்துகிறது என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

*சங்க காலத்தில் உயிரினங்களின் வாழ்க்கை இயற்கை அமைப்பினை மையமாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.அதாவது உயிரினங்களின் உணவு,பழக்க வழக்கம்,பணபாடு,கலாச்சாரம் ,பொழுதுப்போக்கு,எண்ணங்கள்,நம்பிக்கைகள் என அனைத்துமே இயற்கைச் சூழலைப் பின்னணியாகக் கொண்டு அமைக்கப்பட்டதே என்பதற்கு சங்க இலக்கியங்களில் ஏராளமான பதிவுகள் உள்ளன.சங்க இலக்கியத்தை நாம் பாட்டும் தொகையும் சேர்ந்த தொகுப்பு என்று குறிப்பிடுகின்றோம்.இதனை,*

*நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு*
*ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்*
*கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம்புறமென்று*
*இத்திறத்த எட்டுத்தொகை*

*எனும் பழம்பாடல் தொகைநூல் எவையென பட்டியலிடுகின்றது.*

*அந்தவகையில் சங்கத் தொகைநூல்களை நாம் அகம்-5, புறம்-2, அகப்புறம்-1 என வகைப்படுத்தியுள்ளோம்.இதில் அக நூல்களின் எண்ணிக்கையே மிகுதி.காரணம்,ஞாலத்தின் வளர்ச்சிக்கு அன்பின் டர்பு மிக மிக அவசியமான ஒன்று.இந்த அன்பானது இரண்டு உயிர்களின் உறவால் அதாவது ஆணும்,பெண்ணும் உணர்வாலும் உயிராலும் இணைகின்ற போது ஏற்படும் ஒன்று.பழந்தமிழர் வாழ்வியலில் அகம் என்பது ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் கண்டு காதலித்து,மணம்புரிந்து இல்லறம் நடத்துவதோடு தொடர்புடைய வாழ்வின் பகுதி ஆகும்.2 இலக்கியங்கள் மக்களின் அகவாழ்க்கை பற்றி மிகவும் விரிவாகப் பேசுகின்றன.தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியம் இலக்கியங்களில் அகப்பொருளைக் கையாள்வது பற்றிய இலக்கணங்களை வகுப்பதுடன்,அகவாழ்வின் பல்வேறு அம்சங்கள் பற்றியும் எடுத்துரைக்கின்றது.எனவே உலக உயிரினங்களின் வாழ்க்கைமுறைக்கு அடிப்படைத்தேவையாக அமைவது அன்பெனும்(காதல்)அக உணர்வே ஆகும்.அதனடிப்படையில் அஃறிணை உயிரினங்களின் வாழ்க்கையமைப்பு முறை மனிதகுல வாழ்வினை எங்ஙணம் மேம்படுத்துகிறது என்பதைக்குறித்து இனி ஆராயலாம்.*

*1.குறுந்தொகை*

*யானை*

*தலைவனின் பிரிவால் வருந்துகின்ற தலைவி தேற்றுவிப்பதாக இப்பாடல் அமைந்துள்ளது.மீண்டு வந்து விரைவில் உன்னை சந்திப்பேன் என்று சொல்லிச் சென்ற தலைவனைக் காணாது மிகுந்த வருத்தமடைகிறாள்.இதனைக்கண்ணுற்ற தோழி வருந்தாதே தலைவி! அவர் பெரிதும் இளகிய அன்புள்ளம் கொண்டவர்.தன்னையே நமக்கு கொடையாக வழங்கும் கொடையுள்ளம் கொண்டவர்.ஒரு வேலை உன்னிடம் சூளுரைத்ததை மறந்திருந்தாலும்கூட அவர் கடந்து செல்லும் வழி உன்னை அவருக்கு நினைவூட்டும் ,அதாவதுஆண்யானை பெண்யானையின் பசியைப்போக்க தனது நீண்ட கையாள் யாமரத்தினது கிளைகளை உரித்துத் தரும் அதனை உண்டு அப்பெண்யானை தனது பசியினைப்போக்கிக் கொள்ளும்.இச்செயல்பாட்டினைப் பார்த்ததும் தலைவனுக்கு நம் நினைவு வந்து விடும்.எனவே நீ வருந்தாதே என்று தலைவியை தோழி தேற்றுகிறாள்.என்பதை பாலை பாடிய பெருங்கடுங்கோ,*

*நசை பெரிது உடையர் நல்கலும் நல்குவர்*
*பிடிபசி களைய பெருங்கை வேழம்*

மென் சினை யாஅம்பொளிக்கும்
அன்பின தோழி அவர் சென்ற ஆறே (குறுந் -37)
எனும் பாடலடிகளின் மூலம்உணர்த்துகின்றார்.3
இக் குறுந்தொகைப் பாடலில் கூறப்பட்டுள்ள யானை என்னும் அஃறிணையின் வழியாக இல்லற வாழ்வில் இணைந்திருக்கும் ஆணுக்கும் பெண்ணுக்குமான இல்லறக் கடமைகளையும், விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கையும், துன்பம்வரும் நேரத்தில் துணை நிற்கும் பண்பினையும் குறித்து இப்பாடலில் இடம் பெற்றுள்ள யானை உயர்திணையாகிய மனிதர்களுக்கு நன்கு உணர்த்துகின்றது.அதாவது
ஒரு ஆண் துன்பத்தில் உழல்கின்ற பொழுது பெண்ணும், ஒருபெண் துன்பத்தில் உழல்கின்ற போது ஆணும் ஒருவருக்கொருவர் உதவிக்கொண்டு அன்புணர்வோடு பெண் யானையினது பசியைப் போக்கிய ஆண்யானையினைப் போல நாமும் அன்புள்ளத்தோடு ஒருவர் தேவையை மற்றவர் புரிந்து கொண்டு வாழ வேண்டும்.மேலும்,

பறவை
ஞாயிறுபட்ட அகல்வாய் வானத்து
அளியதாமே கொடுஞ்சிறைப் பறவை
இறையுற வோங்கிய நெறியயல் மராஅத்த
பிள்ளை உள்வாய் செரீஇய
இரைகொண்டமையின் விரையுமாற் செலவே4 (குறுந் -92)
என்னும் இத் தலைவிக் கூற்றுப்பாடலின் வழியே இரைத்தேட வெளியில் சென்ற பறவைகள் தங்களின் குஞ்சுகளுக்காக இரையை வாயில் கவ்விக்கொண்டு தமது கூடுகளை நோக்கிப்பறந்து செல்லுகின்றன. அதனைப் பார்த்த தலைவிக்குத் தன்னுடைய தனிமையும் ,காம நோயும் நினைவிற்கு வருகின்றன. மேலும் தலைவி கணவர் தன்னோடு இல்லையே என்ற வருத்தத்தை தன் தோழியிடம் கூறுகிறாள்.இப் பாடலில் பறவையாகிய அஃறிணை உணர்த்தும் கருத்தாவது,
பிரிந்து சென்ற தன் கணவர் இன்னும் வரவில்லையே என்ற ஏக்கம்,காம நோயின் தாக்கம் மற்றும் இந்த அஃறிணையாகிய பறவைகளுக்கு இருக்கின்ற குடும்ப பாசம் கூட தலைவனுக்கு இல்லையே என்ற குடும்பத்தின் மீது உள்ள பாசத்தை வெளிப்பட வைக்கின்றது.அதாவது வாழ்க்கையில் கணவனுக்கும் மனைவிக்கும் உள்ள மிகப் பெரிய பொறுப்பு,கடமை பிள்ளைகளைப் பேணி பாதுகாத்தல்.அந்த இல்லறக்கடமையினை செயலாற்ற வேண்டுமென்ற கருத்தினை இக்குறுந்தொகைப்பாடல் அருமையாக அறிவறுத்துகின்றது .

2.அகநானூறு
எறும்பு
ஆள்வினைக்கு எழுந்த அசைவுஇல் உள்ளத்து
ஆண்மை வாங்க காமம் தட்ப
கவைபடு நெஞ்சம் கண்கண் அகைய
இருதலைக்கொள்ளி இடைநின்று வருந்தி
ஒருதலைப் படாஅ உறவி போன்றனம்5 (அகம்-339 , 6-10)
எனும் இப்பாடலில் தலைவனின் மனநிலைக் குறித்து பதிவு செய்யப்பட்டுள்ளது.
அதாவது,பொருள் ஈட்டி வர வேண்டித் தலைவன் தலைவியைப் பிரிந்து செல்கின்றான்.சென்றவன் இடைவழியில் அவனளுடைய பண்புகளை நினைத்து வருந்துவதை ,இருதலைக்கொள்ளி எறும்புப் போல,ஒரு புறம் முயன்றுபொருள் தேட வேண்டும் என்ற எண்ணம் காரணமாகத் தளர்விலாத உள்ளத்து எழுந்த ஆண்மை முன்னே இழுக்கின்றது.மறு புறம் தலைவிபால் கொண்ட காமம் பின்னே நின்று தடுக்கின்றது.இது எப்படி உள்ளது என்றால் மூங்கிலின் இருபுறம் கணுக்களில் தீப்பற்றிக் கொள்ள குழலின் உள்ளிருக்கும் எறும்பானது இருபுறமும் வெளியில் வரமுடியாமல் தவிப்பதைப் போல குடும்பத்தில் இருக்கும் சில ஆண்மக்கள் பொருளீட்டுவதிலும்,மனைவியின் அன்பினிலும் சிக்கிக்கொண்டு தவிப்பதை பலரது வாழ்க்கையில் காணமுடிகின்றது.

ஆண்களைப் பொறுத்தவரையில் இல்லற வாழ்க்கை இனிமையாக நடத்த வேண்டுமென்றால் பொருள் அவசியம் என்பதை உணர்ந்தவர்கள் .இதனால் தான்,'வினையே ஆடவர்க்கு உயிர்'என்கிறது குறுந்தொகை அந்தவகையில் வினை ஒரு கண் என்றால் மனைவி மறு கண்.ஆகவே மனிதனுக்கு இரண்டு கண்களுமே அவசியமாதல் போல தலைவனுக்கு பொருளீட்டலும் அவசியம் மனைவியுடன் இருப்பதும் அவசியம் இவ்வாறிருக்கும் வேளையில் இங்கே குறுந்தொகையிலிருக்கும் ஒரு தலைவன்பொருளீட்டதளுக்கும் மனைவியினது காதலுக்கும் இடையே மாட்டிக்கொண்டு இருதலைக் கொள்ளி இடைநின்று வருந்துதலைப்போல வருந்துகின்றது. ஒரு ஆண்மகன் இல்லற வாழ்வினை இனிமையாக நடத்தவும், மற்றவர்கள் புகழும்படியாக வாழவும் மனைவியும் பொருளும் அவசியம் ஆகும் என்பதனை இக்குறுந்தொகைப் பாடல் நன்கு உணர்த்துகின்றது.இதனால்தான்,

அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு6 (குறள்.247)

என்கிறது வள்ளுவம்.

புலி

யானை தன் தந்தத்தினால் குத்தியதால் புண் மிகுந்து காணப்பட்டது.அவ்வாறு புண்பட்டுகிடந்த ஆண் புலியை,பெண்புலி காவல் காத்தது.இதனை,

வெண்கோட்டு யானை பொருத புண்கூர்ந்து
பைங்கண் வல்லியம் கல்லளைச் செறிய
முருக்கரும் பன்ன வள்ளுகிர் வாய்ப்பிணவு 7 (அகம்.362 ,3-5)

இப்பாடல் உணர்த்தும் கருத்தானது குடும்பத்தில் ஒரு ஆண்மகன் நோய்வாய்ப் பட்டு நலிவுற்றிருக்கும் சமயத்தில் பெண்ணானவள் ஆண்மகனுக்கு துணைநின்று அவரையும் குடும்பத்தையும் பேணி பாதுகாக்க வேண்டும் என்பதை இப்பாடல் நன்கு உணர்த்துகிறது.

3.ஐங்குறுநூறு

அகவாழ்க்கையின் அம்சங்களை அழகாக எடுத்துக்கூறும் ஐங்குறுநூற்றில் குதிரை,புலி,யானை,பன்றி,குரங்கு,செந்நாய்,மான்,முதலை,நீர்நாய்,ஆமை,மகன்றிற் பறவை போன்ற பல விலங்குகள் இடம்பெற்றுள்ளன.அதனடிப்படையில்,ஒவ்வொன்றாக பார்க்கலாம்.

மகன்றிற் பறவை

உயர்திணை,அஃறிணை என்று எதுவாக இருந்தாலும் ஒன்றின் மீது ஒன்று ஏதோஒரு வகையில் அன்பு செலுத்தியே வாழ்கின்றோம்.அன்பில்லையேல் வாழ்க்கை இல்லை.இதனால்தான் வள்ளுவர்,

அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாள் 8 (குறள் :71)
அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு 9 (குறள்:72)
அன்பின் வழியது உயிர்நிலை10 (குறள்:80)

என்று கூறுமளவிற்கு அன்பு அலாதி இன்பம் தரக்கூடியது,அளவிடமுடியாத ஒன்று அன்பு என்றால் அது மிகையல்ல. இங்கே மகன்றிற் பறவை எனும் ஒரு வகை பறவையானது அன்றில் பறவையைப் போல ஒன்றை விட்டு ஒன்று பிரிந்து வாழாத இயல்புடையன.அதுபோல இவ் ஐங்குறுநூற்றுப்பாடலில் இடம்பெற்றுள்ள தலைவன்,தலைவி ஒரு சிறு கண பொழுதும் பிரியாத் தன்மையுடையவர்கள் என்பதை, குறுங்கால் மகன்றி லன்ன உடன் புணர் கொள்கைக் காதலோரே11 ( ஐங்குறு.381)

என்னும் பாடலடிகளின் மூலம் மகன்றிற் பறவைகளாகிய அஃறிணையின் அன்பினைப் போல தலைவனும் தலைவியும் நெருங்கிய அன்பு கொண்ட கொள்கையுடையவர்கள் என்று உணர்த்துவதின் மூலம் ஐயறிவுயிர் கொண்ட அஃறிணை ஆற றிவு கொண்ட உயர்திணைக்கு முன்னுதாரணமாக உள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

முதலைகள்

தன்பார்ப்புத் தின்னும் அன்பின் முதலையொடு
வெண்பூம் பொய்கைத்து,அவன் ஊர் என்ப12 (ஐங்குறு .41, 1-2)

*தாய் சாப் பிறக்கும் புள்ளிக் களவனொடு*
*பிள்ளைத்தின்னும் முதலைத்து அவன் ஊர்*
*எய்தினன் ஆகின்றுகொல்லோ? மகிழ்நன்13 (ஐங்குறு .24 ,1-)*

*எனும் பாடலில் முதலை தானீன்ற பிள்ளையைத் தன்னுயிர் நீத்தும் காக்கும் இயல்புடைய தாய்மைப் பண்பிற்கு முற்றும் மாறாகத் தான் ஈன்ற பிள்ளையை அன்பு சிறிதுமின்றி தானே இறையாகக் கொள்ளும் இயல்புடையது. தலைவன் இத்தகைய கொடுமைப் பண்பு நிறைந்த ஊரினில் வாழ்பவன் ஆதலால் அவனும் முதலைக்குரிய கொடுமைப் பண்பினைப் பெற்றவனாக இருப்பான் போலும் என்பதால் ஐயறிவு கொண்ட அஃறிணை வாழ்வியல் முறை உயர்திணைப் பண்புகளை மாற்றிவிடும் என்பது இப்பாடலின் மூலம் உணர்த்தும் செய்தியாகும்.*

*ஆமைக் குட்டிகள்*
*தீம்பெரும் பொய்கை யாமையிளம் பார்ப்புத்*
*தாய்முகநோக்கி வளர்ந்திசினாஅங்14 (ஐங்குறு .44)*

*இனிய நீரைக் கொண்ட பெரிய பொய்கையில் வாழும் யாமையின் இளம்பார்ப்புகள் தம் தாயின் முகம் நோக்கி வாழ்வுப் பெற்றார் போல நின் மனையாலும் உன்னுடைய மார்பினை(நெஞ்சம்) நோக்கியே வாழ்கின்றாள்.இங்கே தலைவனாகிய உயர்திணைக்கு யாமை எனும் அஃறிணை வழியாக பாடம் கற்பிக்கப்படுகின்றது.அதாவது ஒரு பெண் திருமணமானவுடன் தன் கொண்ட கணவனுடன் செல்ல வேண்டும்.அவ்வாறு செல்லும் போது அப்பெண்ணானவள் தாய்,தந்தை, உடன்பிறப்புகள் என அனைவரையும் பிரிந்து செல்லும் நிலை ஏற்பட்டுவிடுகின்றது. இந்தநிலையில் அப்பெண் தன்னுடைய கணவனையே தாய்க்கு நிகராக நினைத்து வருவாள். எனவே தாயாக நினைத்து வரும் தலைவியை தலைவன் நெஞ்சில் நிறுத்தி தாய்ப்போல் காக்கும் கடப்பாடுடையவனே தலைவன் என்னும் மனிதம் சார்ந்த வாழ்வியல் கருத்தே இப்பாடலின் கருத்தாகும்.*

*4.கலித்தொகை*

*பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல், அன்பெனப்படுவது தன்கிளை செறாமை என்பதற்கு இலக்கணமாகத் திகழும் கலித்தொகையில் கூட*
*பிரிவு எண்ணிப் பொருள்வயிர் சென்றநம் காதலர்*
*வருவர்கொல்,வயங்கிழாய் வலிப்பல் யான் கேள்இனி*
*…………. ………….. ………………….. ……………..*
*துடி அடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்*
*பிடி ஊட்டி பின் உண்ணும் களிறு எனவும் உரைத்தனரே*
*…………. ………….. ………………….. ……………..*
*இன் நிழல் இன்மையான் வருந்திய மடப் பிணைக்குத்*
*தன் ,நிழலைக் கொடுத்து அளிக்கும், கலை எனவும் உரைத்தனரே*
*என ஆங்கு இனைநலம் உடைய கானம் சென்றோர்*
*புனைநலம்வாட்டுநர்அல்லர்15 (கலித் .11)*

*எனும் கலித்தொகைப் பாடலடிகளின் மூலம் வாழ்க்கையினை அறவழியில் நடத்திடவும் மற்றவர்களுக்கு தானதர்மங்கள் செய்திடவும் பொருள் அவசியம் என்பதால் பொருளீட்டுவதற்கு தலைவன் மிகவும் கரடு முரடான,கொடிய விலங்குகள் நிறைந்த காட்டினைக் கடந்து செல்கின்றான்.எனவே தலைவியைப் பிரிய நேரிடுகின்றது.இந்த சமயத்தில் அக்காட்டு விலங்குகல்,பறவைகளின் செயல்பாடுகள் தலைவனுக்கு தலைவியின் நினைப்பை வரவழைக்கும் என்பதனை மேற்கண்ட பாடலடிகள் உணர்த்தும்.அதாவது ஆண் யானையானது கலங்கிய சிறிதளவு நீரையும் தான் உண்ணாது தன்னுடைய பெண் யானைக்கு ஊட்டி மகிழும் காட்சி,வெயிலின் வெம்மையால் தாங்க முடியாத மடப்பிணைக்கு தன் நிழலைத் தந்து உதவும் கலை .இவ்விருகாட்சிகளையும் கருத்தில் கொண்டால் என் தலைவன் நிச்சயம் என்மீது அன்பு பெருக்கெடுத்து விரைவில் திரும்பிவிடுவான் என் தலைவன் என்று தலைவி உறுதிபட கூறுகின்றாள் என்றாள் தலைவிக்கு அஃறிணையாகிய களிறு -பிடி,பிணை-கலை உணர்த்திய*

செய்தி மெச்சத்தக்கதே. இவ்வாறு சங்க அக இலக்கியங்களிலும் மற்ற இலக்கியங்களிலும் ஏராளமான வாழ்வியல் கருத்துகள் அஃறிணை பொருள்களான பறவைகள்,விலங்குகளின் அன்பு பரிமாற்றம்,செயல்பாடுகள் போன்றவற்றின் வாயிலாக தலைவனுக்கோ,தலைவிக்கோ அல்லது மற்றவர்களுக்கோ வாழ்வின் ஒழுக்கத்தையும் அன்பு கலந்த வாழ்வினையும் நன்கு உணர்த்தும்.

ஆய்வு முடிவு

உயர்திணை ஆறறிவு கொண்டிருந்தாலும் அஃறிணை ஐந்தறிவு கொண்டிருந்தாலும் ஆறறிவு கொண்ட அஃறிணை உயிர்களிடத்தில் ஏராளமான கருத்துக்களை நாம்உள் வாங்க வேண்டியிருக்கின்றது என்பதே இவ்வாய்வில் நாம் கண்ட உண்மையாகும். ‘விஞ்ஞானம் வளர வளர மனித நேயம் அனைத்தும் மண்குழிக்கு போகின்றதோ?’எனும் கவிக்கோவின் கூற்றிற்கிணங்க அறிவியல் வளர்ச்சியினில் ஆழ்ந்து உறைந்துக் கொண்டிருக்கும் இந்த வேளையில் நாம் நம் வாழ்க்கையைப் பற்றியும் சிந்தித்தாக வேண்டும்.இலக்கியம் என்பதே வாழ்க்கையின் வாழ்க்கையின் பிரதிபலிப்பு.இதனால்தான் ‘ The Literature is the criticisam of life’ என்கிறார் மேனாட்டு அறிஞர் மேத்யூ ஆர்னால்டு.எனவே வாழ்க்கை நாம் அர்த்தம் உள்ளதாக வாழவேண்டுமென்றால் ஒருவர் மீது ஒருவர் அன்பு செலுத்தி வாழவேண்டும் என்பதே இவ்வாய்வு கண்ட முடிபாகும். அணைவரிடமும் அன்பு செலுத்துவோம்! அரத்தம் உள்ள வாழ்வினை வாழ்வோம். நன்றி

குறிப்புகள்

*1.நன்னூல் ,நூற்பா.எண் -261,பக் :11*
*2. பிள்ளை.கே.கே,பக். 132,2009,தமிழக வரலாறும் பண்பாடும்*
*3. குறுந் , பா.எண் :37,பக் :103*
*4. குறுந்,பா.எண் :92,பக்:227*
*5.அகம், பாஎண்:339,பக்:998*
*6.குறள் எண்:247,பக்:55*
*7. அகம்.,பா.எண் :362,பக்:1057*
*8. குறள் எண்:71,பக்:21*
*9. குறள் எண்:72,பக்:21*
*10. குறள் எண்:80,பக்:21*
*11. ஐங்குறு,பா.எண்:381*
*12.ஐங்குறு, பா.எண் :41,பக்:87*
*13.ஐங்குறு, பா.எண் :24,பக்:56*
*14.ஐங்குறு, பா.எண் :44,பக்:94*
*15.கலித், பா.எண் :11,பக்:38,39*

ஆய்விற்கு துணைநின்ற நூல்கள்

*1.நன்னூல்,சொல்,காண்டிகையுரை-2,ஆறுமுகநாவலர்,முல்லைநிலையம் சென்னை,மறுபதிப்பு-2011.*
*2.பிள்ளை.கே.கே,,தமிழக வரலாறும் பண்பாடும்,உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,சென்னை ,மறுபதிப்பு-2009.*
*3.குறுந்தொகை , முனைவர் அ. தட்சிணாமூர்த்தி ,நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்,அம்பத்தூர் ,சென்னை ,ஐந்தாம் பதிப்பு-2014*
*4.அகநானூறு-2 , முனைவர் இரா.செயபால் , நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்,அம்பத்தூர் ,சென்னை ,ஐந்தாம் பதிப்பு-2014*
*5.திருக்குறள் ,புதியஉரை ,புலியூர்க்கேசிகன் ,பூம்பார் பதிப்பகம் ,சென்னை-2021.*
*6.ஐங்குறுநூறு-1, முனைவர் அ. தட்சிணாமூர்த்தி, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்,அம்பத்தூர் ,சென்னை ,ஐந்தாம் பதிப்பு-2014*
*7.கலித்தொகை. முனைவர் அ. விஸ்வநாதன், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், அம்பத்தூர்,சென்னை,ஐந்தாம் பதிப்பு-2014*

********* ********* ********** ********* ********* ********** ********** **********